# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திருமதி. A. முத்துசாரதா, B.L., P.G.D.P.M.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி , திண்டுக்கல்**

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**அ.வ. எண் 91/2018–ல் நி.ம.எண் 258/2021**
**C.N.R. No.TNDG01-005444-2021**

பொன்னம்மாள் .. மனுதாரர் / வாதி

// எதிராக //

P.V. கிருஷ்ணன்
.. எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இந்த நிறைவேற்றுதல் மனு இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.2.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சுப்புராம் அவர்கள் முன்னிலையாகியும், மனு உரை, எதிருரை, வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்த

<u>உத்திரவு</u>

அசல் வழக்கு எண் 91/2018 ல் 3.11.2020 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி எதிர்மனுதாரர் தீர்ப்புத் தொகையை செலுத்தி வைக்காததால் எதிர்மனுதாரரை, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 21, விதி 37 ன்படி பிடிகட்டளை அறிவிப்பு அனுப்பியும், விதி 38–ன்படி எதிர்மனுதாரரை வாரண்டில் பிடித்து வந்து சிவில் சிறையில் காவல்படுத்துவதன் மூலம் தீர்ப்பாணைத் தொகையை எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொடுக்க உத்தரவிட வேண்டி மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர் தரப்பு மனுவுரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண் 91/2018 தாக்கல் செய்து தீர்ப்பாணை கோரியதில் அவ்வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக எதிர்மனுதாரரிடமிருந்து தீர்ப்பாணைத் தொகை ரூ.10,00,000/–மும் அத்தொகைக்கு 17.7.2015 முதல் 3.11.2020 வரை 18% பின்வட்டியும் அதன் பின்னர் தொகை முழுவதும் செலுத்தி தீர்க்கும் வரை 6% பின்வட்டியும் கணக்கிட்டு வட்டி, அசல் மற்றும் வழக்கின் செலவுத்தொகையுடன் சேர்த்து செலுத்தி வைக்கும்படியாக கடந்த 3.11.2020–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி எதிர்மனுதாரர் தொகை செலுத்தி வைக்க முன்வரவில்லை. எதிர்மனுதாரருக்கு மேற்படி கடன் தொகையை செலுத்த போதிய வருமானம் மற்றும் வசதி இருந்தும் தீர்ப்பாணைத் தொகையை திருப்பிச்

செலுத்தும் நோக்கம் இல்லை. மேலும், மனுதாரர் தரப்பில் சொத்து பற்றிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, அதில் இந்த எதிர்மனுதாரர் B.E. Civil Engineering ஆகப் பணிபுரிந்து மாதம் ரூ.1 லட்சம் சம்பாதித்து வருவதாகவும், கொடைக்கானலில் பிருந்தாவன் பிலிப் இன் என்ற பெயரில் தங்கும் விடுதி கட்டி வாடகைக்கு விட்டு மாதம் ரூ.4 லட்சம் சம்பாதித்து வருவதாகவும், பல லட்சக்கணக்கான மதிப்புடைய ஸ்தாவர சொத்துக்கள் கொடைக்கானல் கிராமத்திலும், பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலம் கிராமத்திலும் உள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு தீர்ப்பாணைத் தொகையை செலுத்த போதிய வசதி வாய்ப்புகள் இருந்தும் எதிர்மனுதாரர் தீர்ப்பாணைத் தொகையை செலுத்தவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தீர்ப்பாணைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு இந்நிறைவேறுதல் மனுவானது எதிர்மனுதாரரை, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21, விதி 37 ன்படி பிடிகட்டளை அறிவிப்பு அனுப்பியும், விதி 38–ன்படி எதிர்மனுதாரரை வாரண்டில் பிடித்து வந்து சிவில் சிறையில் காவல்படுத்துவதன் மூலம் நிறைவேற்று மனுவில் கண்ட தொகையை வசூலிக்க உத்திரவிடக் கோரியுள்ளார்.

3) **<u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் –</u>**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.91/2018 கடனுறுதிச் சீட்டு கடனுக்காக தீர்ப்பாணை கோரியதில் அவ்வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக 3.11.2020 ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த எதிர்மனுதாரர் அத்தீர்ப்பாணையை எதிர்த்து 29.4.2021 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் A.S(MD) No.25494/ 2021 SR No.11700/2021–ல் மேல்முறையீடு கோரி தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் ஒரு தீர்வு எட்டப்படாத நிலையில் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் எதிர்மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பது தெரிந்தும், இம்மனுவினைத் தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) **<u>இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினை–</u>**

இந்த நிறைவேற்றுதல் மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **<u>தீர்வு–</u>**

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண் 91/2018 கடனுறுதிச் சீட்டு கடனுக்காக தீர்ப்பாணை கோரியதில் அவ்வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக எதிர்மனுதாரரிடமிருந்து தீர்ப்பாணைத் தொகை ரூ.10,00,000/–மும் அத்தொகைக்கு 17.7.2015 முதல் 3.11.2020 வரை 18% பின்வட்டியும் அதன் பின்னர் தொகை முழுவதும் செலுத்தி தீர்க்கும் வரை 6%

பின்வட்டியும் கணக்கிட்டு வட்டி, அசல் மற்றும் வழக்கின் செலவுத் தொகையுடன் சேர்த்து செலுத்தி வைக்கும்படியாக கடந்த 3.11.2020–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி எதிர்மனுதாரருக்கு மேற்படி கடன் தொகையை செலுத்த போதிய வருமானம் மற்றும் வசதி இருந்தும் தீர்ப்பாணைத் தொகையை திருப்பிச் செலுத்தும் நோக்கம் இல்லை என்றும், அதனால் தாவா கடனை வசூலிக்கும் பொருட்டு இந்நிறைவேறுதல் மனுவை எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்திருப்பதாகவும் சொல்லப்பட்டு வருகிறது. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மேற்படி சங்கதிகளை அனுசரித்து சாட்சியமளித்து, 24.9.2009 தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்று நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 10.11.2008 தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்து கிரையப்பத்திரம் சான்று நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 10.11.2008 தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்து கிரையப்பத்திரம் சான்று நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 5.2.2024 தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பட்டா எண்.1746 கணினி சான்று நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 5.2.2024 தேதியிட்ட எதிர்மனுதாரர் உள்ள பட்டா எண்.5336 கணினி சான்று நகல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக 23.10.2024, 20.11.2024, 11.12.2024, 8.1.2025 மற்றும் 13.2.2025 ஆகிய தேதிகளில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டும், எதிர்மனுதாரர் தரப்பில் எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படாததால் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் அசல்

வழக்கு எண் 91/2018–ல் 3.11.2020ம் தேதி பிறப்பிக்கப்பட் தீர்ப்பிணை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 29.4.2021 அன்று A.S(MD)No.25494/2021 SR No.11700/2021 மேல்முறையீடு தாக்கல் செய்து அது நிலைவையில் உள்ளது என எதிருரையில் குறிப்பிட்டிருந்த போதிலும் மேற்படி மேல்முறையீடு குறித்து எவ்வித ஆவணச் சான்றுகளும் முன்னிடப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களைப் பரிசீலித்துப் பார்க்கையில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களின்படி ரம்யா என்பவரின் கணவரும், அவரது அதிகாரம் பெற்ற முகவருமான U.R.சுந்தர் என்பவரிடமிருந்தும்,,சிவராமன், சிவப்பெருமாள், குமரேசன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்களிடமிருந்தும் மற்றும் பெரியகருப்பன் என்பவரிடமிருந்து சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்பதும், ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களின்படி மேற்படி சொத்துக்களுக்கு எதிர்மனுதாரர் பெயரில் பட்டா ஏற்பட்டிருப்பதையும் அறியமுடிகிறது. எனவே, எதிர்மனுதாரருக்கு தீர்ப்பாணைத் தொகையை செலுத்தி வைக்க போதுமான வசதி வாய்ப்பு உள்ளது என்பது மனுதாரரால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகவே காணமுடிகின்றது. ஆகையால், மனுதாரர் கோரியபடி எதிர்மனுதாரரை கைது செய்து சிவில் சிறையில் அடைத்து தீர்ப்பாணைத் தொகையை வசூலித்து கொள்ள ஏதுவாக இம்மனுவினை அனுமதிப்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவில்**, இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. எதிர்மனுதாரரை கைது செய்ய வாய்தா 10.04.2025. படி செலுத்த ஒரு வார கால அவகாசம்.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2025 ம் வருடம் மார்ச் மாதம் 4 ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.07.15 13:48:01 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி–</u>**

திரு.பொன்னம்மாள் ( மனுதாரர் )

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.9.2009 | ரம்யா என்பவரின் கணவரும், அவரது அதிகாரம் பெற்ற முகவருமான U.R.சுந்தர் என்பவர் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 10.11.2008 | சிவராமன், சிவப்பெருமாள், குமரேசன் மற்றும் சீனிவாசன் ஆகியோர் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 10.11.2008 | பெரியகருப்பன் என்பவர் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 5.2.2024 | தெய்வநாயகம் மற்றும் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள கூட்டுப் பட்டா எண்.1746 கணினி சான்று நகல் |
| ம.சா.ஆ.5 | 5.2.2024 | எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பட்டா எண்.5336 கணினி சான்று நகல் |

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.07.15 13:48:11 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
அ.வ.எண். 91/2018 ல்
நி.ம. எண் 258/2021
உத்தரவு
நாள்– 4.3.2025